**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 106/2020**
**நாள் 03/11/2025 திங்கட்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – ஜெயசந்திரன் | த/பெயர் – சேஷமநாயுடு |
| வயது – 62 | தொழில் – |
| விலாசம் – | |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி–**

3. நான் தாக்கல் செய்துள்ள வா.சா ஆ 1 முதல் வா.சா ஆ 4 ஆவணங்கள் சான்றிட்ட நகல் தான் என்றும் அசல் ஆவணம் இல்லை என்றால் சரிதான். மேற்படி 4 ஆவணங்களின் அசல் ஆவணங்கள் 1ம் பிரதிவாதி அஜித் கோத்தி என்பவருக்கு ஒப்பந்தம் செய்து கொடுத்த போது அவரிடம் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி 1ம் பிரதிவாதிக்கு நாங்கள் கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல, கடனுக்கு செக்கியுரிட்டியாக தான் எழுதி கொடுத்தோம். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தின் 4ம் பத்தியில் கிரைய ஒப்பந்தமும், பொது அதிகார பத்திரமும் 1ம் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்காக எழுதி கொடுத்தோம் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கடனை திருப்பி செலுத்தியவுடன் மேற்படி ஆவணங்களை ரத்து செய்துவிடுவதாக 1ம் பிரதிவாதி கூறினார். அதனால் 28.10.2005ம் தேதியன்று ஏற்படுத்தப்பட்ட பொது அதிகார பத்திரம் என்றும், கிரைய ஒப்பந்த பத்திரம் என தெரிந்து தான் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. என்ன ஆவணம் என்று மேற்படி ஆவணங்களை எழுதி கொடுத்தேன் என்றால் அடமான பத்திரம் என நினைத்து தான் எழுதி கொடுத்தேன். எதை அடமானமாக கொடுத்தேன் என்றால் என்னுடைய நிலத்தை அடமானம் வைத்தேன். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்ததாக சொல்லியுள்ளேனா அல்லது அடமான பத்திரம் எழுதி கொடுத்ததாக சொல்லியுள்ளேனா என்றால் நான் பிரமான வாக்குமூலத்தை படித்து பார்க்கவில்லை. அடமானத்திற்காக தான் ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்பதை காண்பிக்க நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை.

5. நானும் என் மனைவியும் சேர்ந்து தாக்கல் செய்துள்ள மற்றொரு வழக்கிலும் அஜித் குமார் கோத்தி என்பவருக்கு பொது அதிகார பத்திரமும், கிரைய ஒப்பந்தமும் செய்து கொடுத்துள்ளோம் என்பதை ஒப்புக்கொண்டு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதற்காக கடன் வாங்கியதாக சொல்லியுள்ளோம் என்றால் அறுவடை இயந்திரம் வாங்குவதற்காக கடன்பெற்றோம். எந்த வருடம் அறுவடை இயந்திரம் வாங்கினோம் என்றால் 2005 ம் ஆண்டு ஆந்திராவில் நெல்லூர் அருகில் ஒருவரிடம் வாங்கினோம். அவருடைய பெயர் ஞாபகம் இல்லை. நாங்கள் மேற்படி இயந்திரம் வாங்கியதற்கு ஆதாரம் ஏதேனும் உள்ளதா என்றால் தேடி பார்த்தால் கிடைக்கும். எவ்வளவு ரூபாய்க்கு வாங்கினேன் என்றால் ரூபாய் 13,00,000/- வாங்கினேன். மேற்படி விவரங்கள் எதுவும் என் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. அறுவடை இயந்திரம் வாங்கியதற்காக தான் கடன் பெற்றேன் என கூறும் பட்சத்தில் அந்த இயந்திரம் வாங்கியதற்கான ஆவணங்கள்

அனைத்தும் என் வழக்கிற்கு முக்கியமான ஆவணங்கள் என்றால் சரிதான். அதற்கு பதிவு புத்தகம் இல்லை. அந்த இயந்திரத்தை எவ்வளவு நாட்கள் வைத்திருந்தேன் என்றால் 10 வருடங்களாக வைத்திருந்தேன், தற்போது இல்லை. அந்த அறுவடை இயந்திரத்தை சொந்த உபயோகத்திற்கு மட்டும் பயன்படுத்தினேனா என்றால் இல்லை, வாடகைக்கும் கொடுத்து வந்தேன். அந்த இயந்திரம் பழுதடைந்து சரிசெய்துள்ளேனா என்றால் தச்சூர் கூட்டு சாலையில் உள்ள அசோக் பட்டரையில் பழுதுபார்த்துள்ளேன் அதற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை.

7. முதல் பிரதிவாதியிடம் வாங்கியதாக கடனை எப்படி திருப்பி செலுத்தினேன் என்றால் மாதா மாதம் தவணையாக 10 வருடங்களில் திருப்பி செலுத்திவிட்டேன். நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண் 227/2014 என்ற வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னரே மேற் கூறியவாறு கடனை திருப்பி செலுத்திவிட்டேனா என்றால் ஆமாம். நான் கூறியவாறு கடனை திருப்பி செலுத்தியதாக கூறுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் 1ம் பிரதிவாதி வாங்கிய பணத்திற்கு ரசீது கொடுத்தார் மற்றும் நோட்டு புத்தகத்தில் எழுதி கொடுத்தார். வழக்கு சொத்திற்கான பட்டா என் பெயரிலும் என் மனைவி பெயரிலும் கூட்டாக உள்ளது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி ராகேஷ் என்பவர் பெயரில் தான் வழக்கு சொத்திற்கு பொது அதிகார பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் அவரை பார்த்ததில்லை.

8. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா ஆ 7 பொது அதிகார ரத்து பத்திரத்தை நானும் என் மனைவியும் தான் செய்தோம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் 05.07.2013 தேதியன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

அந்த ஆவணத்தில் 28.10.2005 தேதியன்று 2ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக்கொடுத்த பொது அதிகார பத்திரம் ரத்துசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுமார் 8 வருடங்கள் கழித்து மேற்படி பொது அதிகார பத்திரம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொது அதிகார பத்திரம் ஏற்கெனவே எழுதி கொடுத்த காரணத்தினால் தான் ரத்து செய்தேன் என்றால் சரிதான்.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**